2007 அக்டோபர் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இந்த நிகழ்வினை ஏற்கெனவே எனக்கு அவர் நினைவூட்டியிருக்கிறார்; நிச்சயமாக உரிய உதவி வழங்கப்படும். குடும்பங்களுக்கு வழக்கமாகத் தரப்படுகின்ற குடும்ப நல நிதி வழங்கப்படும் என்பதையும், காயம்பட்டவர்களுக்கு சிகிச்சைக்கான செலவுத் தொகை வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அவர் 2 இலட்சம் ரூபாய் என்று கேட்டார். வழக்கமாக ஒரு இலட்சம் ரூபாய்தான் தருவது. அவர் அவையிலே கேட்ட காரணத்தினால், அவர் கேட்ட 2 இலட்சம் ரூபாய் அந்தக் குடும்பத்திற்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லுங்கள்.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உண்மையிலேயே அவர்களுக்கு 2 இலட்சம் ரூபாய் என்பது, ஒரு தெய்வம் கொடுத்ததைப்போன்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட காரியத்தைச் செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### (இ) நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்காகக் கையகப்படுத்தப்பட்ட நில உரிமையாளர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் நிவாரணம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

*பிற்பகல் 12-20*

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒரு பிரச்சினையை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 1957-ல் என்.எல்.சி. நிறுவனம் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய முயற்சியால் அன்றைய பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களால் கொண்டு வரப்பட்ட நிறுவனம். அது இன்று வரையில்

[திரு தி. வேல்முருகன்] [2007 அக்டோபர் 19

45,000 ஏக்கர் விவசாய நிலங்களையும், வீடுகளையும் கையகப்படுத்தி, ஆண்டு ஒன்றிற்கு 1,240 கோடி ரூபாய் இலாபம் ஈட்டுகிற ஒரு மிகப் பெரிய நிறுவனமாகவும், ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுடைய குடும்பங்களை வாழ வைக்கின்ற ஒரு நிறுவனமாகவும் இருந்து வருகிறது. அந்நிறுவனம் கடந்த சில வாரங்களுக்கு முன்பு 69 கிராம மக்களின் ஆயிரக்கணக்கான ஏக்கர்களைக் கையகப்படுத்தி, நிலக்கரி வெட்டியெடுப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதாகத் தகவல் வருகிறது. அதிலே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க விரும்புவது, 50 ஆண்டுக் காலமாக அந்த நில எடுப்புச் சட்டத்தை, அதாவது தொழிற்சாலைகளுக்கான நிலம் கையகப்படுத்துதல் என்கிற ஒரு சட்டத்தைப் பயன்படுத்தி என்.எல்.சி. நிருவாகம் நம்முடைய அரசு மூலமாக நிலத்தைக் கையகப்படுத்தி வருகிறது. மற்ற மாநிலங்களில் அந்தச் சட்டம் இல்லை. Coal Bearing Act என்கிற அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே நிலம் கையகப்படுத்தப்பட்டு அதற்கு ஈடான தொகை அங்கு வழங்கப்படுகிறது.

ஆண்டொன்றுக்கு ஒரு ஏக்கரில் 30 கோடி ரூபாய் இலாபம் ஈட்டுகிற அந்த நிறுவனம் அதில் ஒரு சதவிகிதத் தொகையை, அதாவது 30 இலட்சம் ரூபாயை ஏக்கருக்கு வழங்க மறுக்கிறது. கிட்டத்தட்ட 17,000 ஒப்பந்தத் தொழிலாளர்களும், 3,000 Apprentice முடித்தவர்களும் பணி வேண்டி பல போராட்டங்களையும், உண்ணாவிரதங்களையும் தொடர்ந்து அங்கு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள சுற்று வட்டாரக் கிராம மக்கள் என்.எல்.சி-யினுடைய மருத்துவமனைக்குப் பிரசவத்திற்குச் சென்றால்கூட 6,000 ரூபாய் பணத்தைக் கட்டினால்தான் அவர்களுக்கு ஊசி போடவும் மருத்துவம் பார்க்கவும் முடியும் என்கிற ஓர் அவல நிலை உள்ளது. சுற்று வட்டார மக்களுக்கான குடிநீர் வசதி, விவசாயிகளுக்குத் தர வேண்டிய விவசாய நீர் என்கிற அனைத்தும் அங்கு மறுக்கப்பட்டு, என்.எல்.சி. என்பது ஏதோ ஒரு தனி மாநிலத்தில் ஒரு தனி சர்வாதிகாரம் பெற்ற ஒரு நிறுவனமாக இயங்கிக்கொண்டு வருகிறது. அந்த நிறுவனம் அந்த மக்களுக்கான அடிப்படை வசதிகளையும், மக்களுக்கான நியாயமான கோரிக்கைகளையும், நிலம் கொடுக்கிறவர்களுக்குக் கொடுக்க வேண்டிய வேலைவாய்ப்பையும் தர மறுப்பதையும், அந்த நிலத்திற்கான இழப்பீட்டுத் தொகையைத் தர மறுப்பதையும் குறித்துக் கடந்த காலக் கூட்டத் தொடரில் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்தை நான் ஈர்த்தபோது, "நிச்சயமாக என்.எல்.சி. அதிபர்களையும், இயக்குநர்களையும் அழைத்து நான் பேசி

ஒரு நல்ல முடிவை எடுப்பேன்" என்று முதலமைச்சர் அவர்கள் உறுதி தந்தார்கள்.

அதன் அடிப்படையில் கடந்த 14 ஆம் தேதி நம் தமிழகத்தினுடைய தலைமைச் செயலாளர் தலைமையில் அனைத்துத் துறை சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்களின் கூட்டம் நடத்தி, கடலூர் மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் அவர்களையும் அழைத்துப் பேசி ஒரு நல்ல முடிவை எடுப்பதற்கு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் முயற்சி எடுத்ததால், 16 ஆம் தேதி எங்கள் தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்களின் தலைமையில் ஒரு இலட்சம் மக்களைத் திரட்டி மாபெரும் ஒரு போராட்டத்தை நாங்கள் நடத்துவதற்கு முயற்சித்தோம். ஆனால் முதலமைச்சர் அவர்கள், அந்த அறிவிப்பை ஏற்று அவர் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக ஒரு இலட்சம் மக்களைத் திரட்டி அங்கு போராட்டம் நடத்தினால் என்.எல்.சி.-யைப் பாதுகாப்பதற்கு முடியாது; அதனால், காவல் துறையிலிருந்து அன்றைக்கு 6 மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர்கள், 2 டி.ஐ.ஜி.-க்கள், 10,000 காவலர்கள், ஒரு ஐ.ஜி. என்று பாதுகாப்பிற்கு நியமிக்கப்பட்டனர். அந்த மிகப் பெரிய போராட்டத்தை, முதலமைச்சருடைய முயற்சிக்குப் பின்பாக நாங்கள் குறைத்துக்கொண்டு ஓர் அடையாளப் போராட்டமாக எங்கள் அய்யா அவர்கள் அன்றைக்கு நடத்தி முடித்திருக்கிறார். எங்கள் அய்யா அவர்களும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்.

அந்த என்.எல்.சி.க்கு நிலம் கொடுத்த மக்களுக்குரிய இழப்பீட்டுத் தொகையும், வீட்டுக்கு ஒருவருக்கு வேலையும், ஒப்பந்தத் தொழிலாளர்களுக்குப் பணிப் பாதுகாப்பும், Apprentice முடித்தவர்களுக்கான வேலைவாய்ப்பும், சுற்று வட்டாரக் கிராம மக்களுடைய வாழ்வியல் ஆதாரம் பாதிக்கப்படாமல் அந்த என்.எல்.சி. நிருவாகம் இந்த நிவாரணங்களையெல்லாம் வழங்குவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் ஒரு முறை தம்முடைய நேரடிப் பார்வையில், நம்முடைய என்.எல்.சி. அதிபர்களை அழைத்து—மத்திய நிலக்கரித் துறை அமைச்சர் அவர்களை எங்கள் மருத்துவர் சின்னய்யா அவர்களோடு டெல்லியில் நாங்கள் அழைத்துப் பேசியபோதுகூட, 'செய்கிறோம்' என்று சொன்னார்கள். ஆனால், செய்ய மறுக்கிறார்கள். தாசரி நாராயண ராவ் அவர்கள், நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கடைக்கண் பார்வையின்பேரில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினையை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** எதையும் செய்யக்கூடிய ஒரு நண்பர் என்று தெரிய வருகிறது. அந்த அடிப்படையில் மத்திய அரசை வலியுறுத்த வேண்டும். என்.எல்.சி. மக்களுக்காகப் பல்வேறு போராட்டங்கள் தினம் தினம் நடந்துகொண்டிருக்கின்றன. அப்படி நடைபெற்றபோதெல்லாம் பாதுகாப்புக் கொடுப்பதும், பேச்சுவார்த்தை நடத்துவதும் தமிழக அரசுக்கு மிகப் பெரிய தலைவலியாக இருக்கிறது. ஆகவே, 1894 ஆம் ஆண்டின் Industrial Act என்ற அந்தச் சட்டத்தின்மூலமாக நிலம் எடுக்கிற சட்ட ஆணையை இரத்துச் செய்துவிட்டு, மத்திய நிலக்கரித் துறையினுடைய நில எடுப்புச் சட்டம்— Coal Bearing Act-ன் பிரகாரம் நிலத்தைக் கையகப்படுத்தி, அதற்கான இழப்பீட்டுத் தொகையை வழங்குவதற்கும், வீட்டுக்கு ஒருவருக்கு வேலை தருவதற்கும், சுற்று வட்டாரத்திலுள்ள அந்தக் கிராமங்களிலுள்ள மக்களுக்குக் குடிநீர், சாலை வசதி என்கிற அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும், மருத்துவ வசதிகளைப் பெற்றுத் தருவதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு சரியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன். வாய்ப்புக்கு நன்றி. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் என்னுடைய கவனத்தை ஈர்ப்பதற்காக நீண்ட நேரம் ஒரு நிகழ்வை இங்கே கோர்வையாகச் சொன்னார். இவ்வளவு நேரம் பேசிய பிறகு என்னுடைய கவனம் ஈர்க்கப்படாமல் இருக்க முடியாது, கவனம் ஈர்க்கப்பட்டிருக்கிறது. கவனிக்கப்படும்; நிச்சயமாக அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், உட்காருங்கள். நேரமாகிவிட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS